# தமிழ் வளர்ச்சிக் கழகம்

## செய்தி மின் மடல்

தனிச் சுற்றுக்கு மட்டும்

2 : 6 ஜூன்–ஜூலை 2026


### உங்களுடன்

வணக்கம்.
தமிழ் மொழி, இலக்கியம்,
பண்பாடு மற்றும்
தமிழியல் பணிகளின் வளர்ச்சிக்காகத்
தொடர்ந்து செயல்பட்டு வரும்
தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்
2025-2026 ஆம் ஆண்டிற்கான
பொதுக்குழுக் கூட்டத்தில்
கடந்த ஓராண்டின் பணிகளை
வரிசைப்படுத்திப் பார்த்ததில்
போக வேண்டிய தொலைவு
புலப்பட்டது.

- பேராசிரியர் வா.செ. குழந்தைசாமி காலத்திலிருந்து கோரிக்கையாக நின்ற தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கான அறை மீட்டெடுக்கப்பட்டிருக்கிறது!

- நிலுவையில் கிடந்த 2020 முதல் 2024 வரையிலான ஐந்தாண்டுக் காலக்கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டுள்ளன.

- 2018-19 முதல் 2024-25 வரை நிலுவையில் இருந்த சங்கப் பதிவுகள் புதுப்பிக்கப்பட்டு நேர் செய்யப்பட்டுள்ளன.
நிதிநிலை மற்றும்
நிதி மேலாண்மையைப் பார்த்தால்,
கடந்த 31.03.2025 நிலவரப்படி
தமிழ் வளர்ச்சிக் கழகக் கணக்கில்
வைப்புத் தொகை ரூ. 18,12,375/-.
இப்போது வைப்புத் தொகை
இரண்டு கோடியே 88 இலட்சத்துக்கு மேல்.
தமிழ்நாடு அரசிடமிருந்து
ரூ. 2 கோடியே 15 இலட்சம் பெறப்பட்டுள்ளது.
மேலும் ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதி திரட்ட
அறங்காவலர் குழுத் தலைவர் மேற்கொண்ட
முயற்சியின் விளைவாக
ஐம்பது இலட்சம் ரூபாய்
புரவலர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது.
செம்மொழி மத்திய நிறுவனத்திலிருந்து
பதிப்புரிமைத் தொகையாக ரூ. 30 இலட்சம்
பெறப்பட்டுள்ளது.

- நன்கொடை வழங்குவோருக்கான 80(G) வருமானவரி விலக்கு தற்காலிகமாகப் பெறப்பட்டு, தற்போது தொடர்ந்து ஐந்தாண்டுகளுக்கு நீட்டிப்புப் பெறப்பட்டுள்ளது.

- 2024-25 ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடாக எதுவும் வரவில்லை.
தற்போது வரை மூன்று நூல்கள்
(நாடகக் களஞ்சியம்,
தமிழியல் கலைக்களஞ்சியம்-2 தொகுதிகள்)
ஊடகங்களின் பாராட்டுகளைப் பெற்று
வருகின்றன.
2024-25 இல் திட்டப் பணிகள்
எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.
ஆனால் 2025-26 ஆம் ஆண்டில்
ஆறு திட்டப் பணிகள்!
நாடகக் களஞ்சியமும்
தமிழியல் கலைக்களஞ்சியமும்
நிறைவேறியுள்ளன.
தமிழ்ச் சிந்தனைக் களஞ்சியமும்
மாணவர் அகராதியும்
நிறைவடையும் நிலையில் உள்ளன.
உலகத் தமிழியல் நூற்களஞ்சியமும்
சொல்புதிது திட்டமும் தொடர்கின்றன.
சொல்புதிது திட்டத்தில் இதுவரை
14 கூட்டங்கள் நடத்தப்பட்டு
431 பிறமொழிச் சொற்களுக்கு நிகரான
தமிழ்ச் சொற்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன.
தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்
நூல்களின் விற்பனைக்காக
டிஸ்கவரி புக் பேலஸ் நிறுவனத்துடன்
மூன்றாண்டு ஒப்பந்தம்!

நூல்கள் வைப்பு அறையின்
சுவர் மற்றும் தரையில்
கரையான் அரிப்பு ஏற்பட்டு
நூல்கள் சேதமடைவது
தடுக்கப்பட்டுள்ளது.
நிதி, ஆலோசனை, ஒத்துழைப்பு
வழங்கிவரும் அறங்காவலர் குழுத் தலைவர்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
அறங்காவலர்கள்,
புரவலர்கள்,
ஆட்சிக்குழு உறுப்பினர்கள்,
பொதுக்குழு உறுப்பினர்கள்,
திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆதரவுடன்
எதிர்வரும் ஆண்டிலும்
தமிழ் மொழி மற்றும்
தமிழியலின் வளர்ச்சிக்காகத்
திட்டமிட்ட பணிகளை
மேலும் விரிவுபடுத்தத்
தமிழ் வளர்ச்சிக் கழகம்
உறுதியேற்கிறது உங்களோடு...

அன்புடன்
ம.ரா.

## ஆலோசனைக் கூட்டம்

01.06.2026 அன்று தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் நிருவாகக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 27.06.2026 அன்று நடைபெறவுள்ள ஆட்சிக்குழு, அறங்காவலர் குழு, பொதுக்குழுக் கூட்டம் குறித்த கலந்துரையாடல்களும் நடைபெற்றன.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் 03.06.2026 அன்று காலை 11.00 மணியளவில் மாணவர் தமிழ் அகராதியின் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. அவ்வமையம் கூட்டத்தில் கலந்துகொண்டோர் விவரம்:

1. தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர், 2. முனைவர் சந்திரசேகரன், 3. முனைவர் அ.ஜேம்ஸ்

தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் அவர்கள் மாணவர் அகராதியின் முன்னேற்றத்தைப் பற்றி கேட்டறிந்த பின் அவர் மாணவர் அகராதியில் சில திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்றார்.




அவையாவன:

1. மாணவர் அகராதி இணையத்தில் பதிவேற்றம் செய்ய இருப்பதால் தலைச்சொல்லுக்கான உச்சரிப்பினை ஒலிபெயர்ப்பு வடிவில் ஒவ்வொரு பதிவின் இறுதியில் சேர்க்கலாம் எனப் பரிந்துரைத்தார்.
2. பாடநூலில் இடம்பெறும் சொற்களை மட்டும் தலைச்சொல்லாக தேர்வு செய்து அகராதி தொகுக்கலாம் எனக் கேட்டுக்கொண்டார்.
3. அனைத்து தலைச்சொல்லுக்கும் எடுத்துக்காட்டுகள் மற்றும் பயன்பாடுகள் அளிக்கவேண்டும் என எடுத்துரைத்தார்.
4. படங்கள் சேர்க்கவேண்டும் என்றார்.
5. முகவுரையில் ஏன் சிறப்புப்பெயர்கள் அகராதியில் சேர்க்கிறோம் என்பதற்கான விளக்கத்தை அளிக்கும்படி கேட்டுக்கொண்டார்.
6. முனைவர் அரங்கன், முனைவர் சந்திரசேகரன் ஆகியவர்களின் திருத்தங்களை அகராதியில் மேற்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார்.

## கலந்துரையாடல்

10.06.2026 அன்று தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் வலைத்தள மேம்பாடு குறித்த கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. வலைத்தளத்தில் மேற்கொள்ள வேண்டிய சீரமைப்புப் பணிகள் குறித்து வலைத்தளப் பணியாளர்களுடன் கலந்துரையாடி ஆற்றுப்படுத்தப்பட்டன.



# சொல்புதிது 14

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சொல் புதிது என்னும் திட்டத்தின் பதிநான்காவது கூட்டம் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் 17.06.2026 புதன்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்றது. இக்கூட்டத்தில் இறுதி செய்யப்பெற்ற சொற்கள் பின்வருமாறு:

| வ. எண் | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|
| 1 | Vegetarian Hotel | காய்கறி உணவகம் |
| 2 | Non Vegetarian Hotel | மீன் கறி உணவகம் |
| 3 | Bike Ride | உந்துருளிப் பயணம் |
| 4 | Bike Tour | உந்துருளி உலா |
| 5 | Bike Taxi | வாடகை உந்துருளி |
| 6 | Hand Band | கைப்பட்டை |
| 7 | Community Villa Plot | சமூகச் சீர் மனை |
| 8 | Delimitation | மறு வரையறை |
| 9 | Digital Hub | மின்னணு இணைய மையம் |
| 10 | Prebiotic | நன்னுயிரூட்டி |
| 11 | Probiotic | நல நுண்ணுயிரி |
| 12 | Review of Related Literature | முன் ஆய்வுப் பார்வை |
| 13 | Sense of Serenity | ஆழ் மன அமைதி |
| 14 | Unique Payment Interface (UPI) | தனித்த பணம் வழங்கிடை முகம் (த.ப.மு) |
| 15 | Peri - Urban | புறநகர் |
| 16 | Stand up Comedy | தனிநபர் நகைச்சுவை |
| 17 | Black Comedy | கருங்கூத்து நகை |
| 18 | Sketch Comedy | சித்திரக் குறுநகை |
| 19 | Surreal Comedy | இயல் மிகை நகை |
| 20 | Cringe Comedy | கடிநகை |
| 21 | Prebiotic Atmosphere | உயிர் முன் வளிமண்டலம் |
| 22 | Pub | மயக்க மையம் |

இக்கூட்டத்திற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் பேராசிரியர்கள் உலகநாயகி பழனி, மு. இராமசுவாமி, ஒப்பிலா மதிவாணன், நா. சந்திரசேகரன், ம.இளங்கோவன், தி. கமலி, சிவ முருகேசன், ஊடகவியலாளர்கள் திருப்பூர் கிருஷ்ணன், மு. முருகேசன், நீச்சல்காரன் இராஜாராமன், நீரை மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



எந்தெந்த ஆங்கிலச் சொற்களுக்கு நிகராகத் தமிழில் சொற்கள் உருவாக்கப்பட வேண்டுமோ அந்த ஆங்கிலச் சொற்களை எவரும் அனுப்பலாம்.

## பொதுக்குழுக் கூட்டம்


தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டம் சென்னைப் பல்கலைக்கழக இரண்டாவது தளத்தில் அறை எண் எஸ் : 20-இல் 27.06.2026 நண்பகல் 11.00 மணிக்கு நடைபெற்றது. இக்கூட்டத்திற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் அறங்காவலர் குழுத் தலைவரான மேனாள் ஒன்றிய அமைச்சர் ப. சிதம்பரம் அவர்கள் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் ஆட்சிக்குழு, அறங்காவலர் குழு, உறுப்பினர்களும் கலந்து கொண்டு அவர்களது கருத்துரைகளை வழங்கினர். கூட்டம் இனிதே நிறைவுற்றது.



## பிரமிக்க வைக்கும் நூல்

# நாடகவியல் களஞ்சியம்!

அண்மையில் நான் படித்த நூல்களில் படித்துப் பிரமித்த நூல் ஒன்று உண்டு என்றால், அது நாடகவியலாளர் மு. இராமசுவாமி தொகுத்துள்ள 'நாடகவியல் களஞ்சியம்' என்ற மாபெரும் நூல். தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ள இந்நூல் நாடகக் கலைச்சொற்கள் மற்றும் நாடக இலக்கியத்தின் தொகுப்பு நூல்.



மு. இராமசுவாமி

நூலை உருவாக்கிய மு. இராமசுவாமி பேராசிரியர், எழுத்தாளர், நாடக இயக்குநர், திரைப்பட நடிகர் எனப் பன்முகம் கொண்டவர். நிஜ நாடக இயக்கம் என்ற நாடகக் குழு மூலம் நாடகத் துறையில் முத்திரை பதித்தவர். இவரது நடிப்புத் திறமையை அறிந்த நாசர், இவரை தேவதை, மாயன் போன்ற திரைப்படங்களில் சில உதிரி வேடங்களில் நடிக்க வைத்தார். 'ஜோக்கர், கே.டி.' போன்ற படங்களில் சில முக்கிய வேடங்களிலும் நடித்திருக்கிறார்.

இவர் உருவாக்கிய 'நாடகவியல் களஞ்சியம்' நூலைப் படிக்கும் போது ஒரு தனி மனிதர் இப்படியொரு சாதனையைச் செய்ய முடியுமா என்ற மலைப்பு ஏற்படுகிறது. எத்தனை ஆண்டுகால உழைப்பு இந்நூலுக்குத் தேவைப்பட்டிருக்கும் எனக் கணக்கிட இயலவில்லை. தமிழ் நாடகவியல் தொடர்பான அரிய கலைக்களஞ்சியமாக இந்நூல் எதிர்காலத்தில் நிலைத்து நிற்கும்.

ஏற்கெனவே பொதுக் கலைக்களஞ்சியம், குழந்தைகள் கலைக்களஞ்சியம், சித்த மருத்துவக் களஞ்சியம் உள்ளிட்ட பல நூல்களை வெளியிட்ட அனுபவம் உடையது தமிழ் வளர்ச்சிக் கழகம். அவ்வரிசையில் இப்போது வெளிவந்துள்ள நாடகவியல் களஞ்சியம் ஒரு மகுடம்.

நாடகக் கலை குறித்த ஏராளமான சொற்களுக்கு, சிறியதாகவும் பெரியதாகவும் தேவைப்படும் வகையில் ஆதாரபூர்வமாக விளக்கம் தருகிறது இந்நூல்.



நூல்: **நாடகவியல் களஞ்சியம்,**
ஆசிரியர்: **முனைவர் மு. இராமசுவாமி,**
வெளியீடு: **தமிழ் வளர்ச்சிக் கழகம்,**
மணிக்கூண்டு வளாகம், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை - 5.
பக். 455 விலை: ரூ.750.
தொலைபேசி: 044 - 25365440

இன்னொரு சிறப்பு ஆங்காங்கே இடம்பெற்றுள்ள பொருத்தமான புகைப்படங்கள். நூல் சொல்லும் செய்திகளுக்குப் புகைப்படங்கள் அழுத்தம் சேர்க்கின்றன. நூலின் உருவாக்கத்தில் கடினமான பல்லாண்டு கால உழைப்பு இருப்பதை ஒவ்வொரு பக்கத்தைப் புரட்டும்போதும் புரிந்து கொள்ள முடிகிறது.

'மீட்டெடுத்த கருவூலம்' என்ற தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் **ம. இராசேந்திரன்** முன்னுரையும் நாடறிந்த நாடகவியலாளர் **இந்திரா பார்த்தசாரதி**யின் அணிந்துரையும் நூலுக்கு மதிப்புச் சேர்க்கின்றன. (இந்திரா பார்த்தசாரதியிடம் அணிந்துரை கேட்குமாறு நூலாசிரியரை நெறிப்படுத்தியவர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் அறங்காவல் குழுத் தலைவரான மேனாள் நிதியமைச்சர் **ப. சிதம்பரம்.**)

நூலாசிரியரின் நீண்ட ஆனால் பயனுள்ள 'என்னுரை' நாடக வரலாறு முழுவதையுமே கண்முன் விரிக்கிறது. ஓவியர் **மருது**வின் அட்டைச் சித்திரம் நூலின் முகப்புக்கு எழில் சேர்க்கிறது.

நாடகத் தமிழுக்கு மு. இராமசாமி செய்துள்ள இப்பணியை நிகழ்காலம் மட்டுமல்ல, வருங்காலமும் கொண்டாடும். இதில் உள்ள பல தகவல்களை இவர் தொகுக்காமல் போயிருந்தால் கால வெள்ளத்தில் மறைந்தே போயிருக்கும்.

உண்மையான தமிழ்த் தொண்டு என்பது தமிழ் வாழ்க என்று மட்டும் சொல்லிக் கொண்டே இருப்பதல்ல. வாழ்த்துவதால் மட்டுமே தமிழ் வாழ்ந்துவிடாது. தமிழை வாழவைக்க இதுபோன்ற நூல்களே உதவுகின்றன.

நூலை வெளியிட்டுள்ள தமிழ் வளர்ச்சிக் கழகத்தையும் நூலை மிகச் சிறப்பானதாக உருவாக்கியுள்ள மு. இராமசுவாமியையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும். ●